### பசும்பொன் அருகே பாக்குவெட்டியில்

# குண்டாறு, ரெகுநாத காவிரி கால்வாய் மராமத்து பணி!

## அமைச்சர் ராஜகண்ணப்பன் ஆய்வு செய்தார்!



இராமநாதபுரம், ஜூன். 26-
முதுகுளத்தூர் தொகுதியில் நிரந்த பாசன வசதிக்காக ரூ.67.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதற்கட்ட பணிகள் முழு வீச்சில் நடந்து வருவதாக அமைச்சர் ராஜகண்ணப்பன் தெரிவித்தார். பசும்பொன் அருகே பாக்கு வெட்டி பகுதியில் நடந்து வரும் வரத்து கால்வாய் மற்றும் மதகு பணி மராமத்து பணிகளை நேற்று முன்தினம் வனத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் ஆய்வு செய்தார்.அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது. விவசாயத்திற்கு தனிபட்ஜெட் அமைத்த முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின், முதுகுளத்தூர் தொகுதி பாசன வசதிக்காக ரூ.67 கோடியே 56 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளார். அதன்படி முதற்கட்டமாக ரூ.15 கோடியே 56 லட்சம் மதிப்பில் குண்டாறு,ரெகுநாத காவிரி வரத்து கால்வாய், மதகு, பாலங்கள் என மராமத்து பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது.

இதனால் கமுதி, முதுகுளத்தூர், கடலாடி ஆகிய 3 ஒன்றியங்களில் பசும்பொன் முதல் ஆப்பனூர் வரையிலும், முதுகுளத்தூர் முதல் சிக்கல் மற்றும் களரி வரையிலும் உள்ள 44 பொதுப்பணித்துறை கண்மாய்கள், 27 யூனியன் கண்மாய்கள் மற்றும் சிறு கண்மாய்கள் பாசன வசதி பெறும்.இது போன்று ரூ.17 கோடியில் பரளையாறு மற்றும் ரூ.35 கோடியில் கஞ்சம்பட்டி ஓடை கால்வாய் மராமத்து பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு விரைவில் டெண்டர் விடப்பட்டு பணிகள் துவங்க உள்ளது. இதன் மூலம் முதுகுளத்தூர் தொகுதியில் சுமார் 131 பெரிய கண்மாய்கள் மற்றும் 30க்கும் மேற்பட்ட சிறு கண்மாய்கள் முழு பாசன வசதி பெறும். இதனால் சுமார் 1.50 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயனடையும் மேலும் மழை காலத்தில் போக்குவரத்து வசதிக்காக பாக்கு வெட்டி பாலம் அருகே செல்லும் கமுதிமுதுகுளத்தூர் சாலையில் மாநில நெடுஞ்சாலை மூலம் ரூ.18 கோடியில் மேம்பாலம் அமைக்கப்பட உள்ளது. இது போன்ற திட்டங்க ளால் முதுகுளத்தூர் தொகுதியில் மட்டும் ரூ.1,200 கோடி மதிப்பில் வளர்ச்சி பணிகள் நடந்து வருவதாக தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் சண்முகநாதன், கோவிந்தராஜ். பூபதிமணி, ஆறுமுகவேல் அமைச்சர் நேர்முக உதவியாளர் கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# விவசாயிகள் மனு கொடுத்த ஏழு நாட்களில் தீர்வு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பனுக்கு விவசாயிகள் நன்றி!

சிவகங்கை ஜூன் 26 -
சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிக் குட்பட்ட சாக்கோட்டை மேற்கு ஒன்றியம் சிறிய எட்டு ஊராட்சிகளை கொண்ட ஒன்றியம் ஆகும். இந்த ஒன்றியத்தில் அதிக அளவில் கண்மாய்கள் குளங்கள் உள்ளது. சாக்கோட்டை மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட படையாணிப்பட்டி முத்துப்பட்டினம் பழைய ஆத்தங்குடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிராமத்து மக்கள் விவசாயிகள் தங்களது கிராமத்தில் நீண்ட காலமாக பராமரிக்கப்படாத பழைய கண்மாய் மடையினை சீரமைத்து தருமாறு பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி தலைமையில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் இந்திராணி, மலர் மற்றும் கிராம மக்கள் விவசாயிகள் கடந்த சில தினங்களுக்கு முன்அமைச்சரும் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான கேஆர். பெரியகருப்பனிடம் கோரிக்கை மனு கொடுத்தார்கள். அந்த கோரிக்கை மனுவினை உடனடியாக நிறைவேற்றி தருமாறு மாவட்ட ஆட்சியர் திட்ட இயக்குனர் ஆகியோருக்கு அமைச்சர் கேஆர் பெரிய கருப்பன் பரிந்துரை செய்தார். அமைச்சரின் பரிந்துரையினை ஏற்று மாவட்ட ஆட்சியர் படையாணிப்பட்டி முத்துப்பட்டினம் பழைய ஆத்தங்குடி ஆகிய கிராமங்களில் உள்ள கண்மாய் மடைகளை சீரமைக்கு மாறு உத்தரவிட்டு ஆணை பிறப்பித்துள்ளார்.


இதற்கு கிராம மக்கள் விவசாயிகள்தமிழக முதல்வர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பனுக்கு நன்றி தெரிவித்துள்ளார்கள். ஏற்கனவே அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தொடர் முயற்சியால் சாக்கோட்டை மேற்கு ஒன்றியத்தில் ஓ.சிறுவயல், ஆற்காடு, மாலையிட்டான்பட்டி, ஆலத்திப்பட்டி, திருவேலங்குடி, சூரக்குடி, சொக்கலிங்கம் புதூர், செட்டிநாடு, சேனாதிப்பட்டி, கொத்தமங்கலம்,வடகுடி ,பொத்தேரி, உள்பட 20 கிராமங்களில் கன்மாய்கள் சீரமைப்பு மணி நடைபெற்று வருகிறது. தற்போது சாக்கோட்டை மேற்கு ஒண்றியத்தில் 25க்கும் மேற்பட்ட கண்மாய்கள் சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இது விவசாயத்திற்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்று கிராம மக்கள் விவசாயிகள் அமைச்சருக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம், தகரை ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டுமான பணியை சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு துணை தலைவர் அன்புமணிமாறன், ஜேசிபி இயந்திரம் மூலம் தொடங்கி வைத்தார், இதில் மாவட்ட கவுன்சிலர் வேல்முருகன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கோம்பையன், மாவட்ட பிரதிநிதி, ஊராட்சி மன்ற தலைவர் நீலாவதி முருகேசன், கிளை கழக செயலாளர் ராமக்கண்ணு, ஒன்றிய தொண்டரணி துணை அமைப்பாளர் திராவிடமணி, ஒன்றிய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் ராசுகுட்டி, கிளைக் கழக நிர்வாகிகள் கிருஷ்ணன், காசிவேல், பூவரசன், தேவராஜ், மணிகண்டன், சஃரிப் விஜய், ரஜினி, சிந்தனைசெல்வன், தமிழரசன், ஊராட்சி செயலாளர் அண்ணாமலை உள்பட பலர் உடன் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ. இராசமாணிக்கம்
### ஜூன் 26 (2016)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர்மீது பற்றுக் கொண்டு, மாணவப் பருவத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

கழகப் பொதுக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

நாகை நிலவள வங்கி தலைவராகவும், நாகை கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைவராகவும், கீழையூர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

1971–ல் நாகை சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா பெரும் பச்சேரி யி ல் சட்ட மன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டப்பட்ட நியாய விலைக் கடையினை திறந்து வைத்து பொதுமக்களுக்கு உணவு பொருட்களை திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல்.ஏ. வழங்கினார். உடன் மேற்கு ஒன்றிய செயலாளர் மா.அண்ணாதுரை உள்ளார்.





# தி.மு.க.
# இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திண்டுக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.ஹரிஹரசுதன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 27.6.2025 | தொப்பம்பட்டி மேற்கு ஒன்றியம் | ஆண்டிநாயக்கன் வலசு | ம.சையது முஸ்தபா<br>அ.சுஹாசினி |
| 2 | | கீரனூர் பேரூர் | கலைஞர் திடல் | ம.சையது முஸ்தபா<br>அ.சுஹாசினி |
| 3 | | வடமதுரை மேற்கு ஒன்றியம் | கம்பிலியம்பட்டி | அ.செல்வகுமார்<br>வ.ராஜேஸ்வரி |
| 4 | | வடமதுரை பேரூர் | ஏ.வி.பட்டி | அ.செல்வகுமார்<br>வ.ராஜேஸ்வரி |
| 5 | 28.6.2025 | தொப்பம்பட்டி மத்திய ஒன்றியம் | தொப்பம்பட்டி | ம.சையது முஸ்தபா<br>அ.சுஹாசினி |
| 6 | | தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியம் | கரியாம்பட்டி | ம.சையது முஸ்தப்பா<br>அ.சுஹாசினி |
| 7 | | வடமதுரை கிழக்கு ஒன்றியம் | புத்தூர் | சி.மில்லர் மண்டேலா<br>சி.ஷாலினி |
| 8 | | அய்யலூர் பேரூர் | ஏ.கோம்பை | சி.மில்லர் மண்டேலா<br>சி.ஷாலினி |
| 9 | | ஒட்டன்சத்திரம் மேற்கு ஒன்றியம் | விருப்பாட்சி | அ.செல்வகுமார்<br>ஜோ.கேத்ரின் மொர்லினா |
| 10 | 28.6.2025 | ஒட்டன்சத்திரம் நகரம் | தும்பிச்சம்பட்டி சத்யா நகர் | அ.செல்வகுமார்<br>ஜோ.கேத்ரின் மொர்லினா |
| 11 | | சாணார்பட்டி தெற்கு ஒன்றியம் | கோபால்பட்டி | பூவை.முருகவேல்<br>வ.ராஜேஸ்வரி |
| 12 | | சாணார்பட்டி வடக்கு ஒன்றியம் | அதிகாரிப்பட்டி | பூவை.முருகவேல்<br>வ.ராஜேஸ்வரி |
| 13 | 29.6.2025 | ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றியம் | கொல்லப்பட்டி | ம.சையது முஸ்தபா<br>வ.ராஜேஸ்வரி |
| 14 | | ஒட்டன்சத்திரம் வடக்கு ஒன்றியம் | இடையகோட்டை | ம.சையது முஸ்தப்பா<br>வ.ராஜேஷ்வரி |
| 15 | | வேடசந்தூர் தெற்கு ஒன்றியம் | பூத்தாம்பட்டி | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 16 | | வேடசந்தூர் பேரூர் | மாரியம்மன் கோயில் தெரு | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 17 | | நத்தம் தெற்கு ஒன்றியம் | வத்திப்பட்டி | பூவை.முருகவேல்<br>ஜோ.கேத்ரிலின் மொர்லினா |
| 18 | | நத்தம் பேரூர் | நல்லகுளக்கடை | பூவை.முருகவேல்<br>ஜோ.கேத்ரிலின் மொர்லினா |
| 19 | | நத்தம் வடக்கு ஒன்றியம் | அனக்காட்டூர் | பூவை.முருகவேல்<br>ஜோ.கேத்ரிலின் மொர்லினா |
| 20 | 30.6.2025 | வேடசந்தூர் வடக்கு ஒன்றியம் | வீரப்பட்டி | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 21 | | எரியோடு பேரூர் | குருக்காளையன்பட்டி | அ.செல்வகுமார்<br>அ.சுஹாசினி |
| 22 | | குஜிலியம்பாறை வடக்கு ஒன்றியம் | நொச்சிப்பட்டி | ம.சையது முஸ்தபா<br>துரை.தினகரன் |
| 23 | | குஜிலியம்பாறை தெற்கு ஒன்றியம் | பல்லாநத்தம் | ம.சையது முஸ்தபா<br>துரை.தினகரன் |
| 24 | | பாளையம் பேரூர் | சிலும்பாகவுண்டனூர் | ம.சையது முஸ்தபா<br>துரை.தினகரன் |

**திண்டுக்கல்**
நாள் : 24.06.2025

கலைஞர் 100
1924 - 2023

